

கோயம்புத்தூரில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ”டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு. முத்துசாமி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கோயம்பத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனா ஆனந்தகுமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. சண்முகசுந்தரம், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் பொதுப்பணித்துறை சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை 29.02.2024 அன்று கல்வெட்டினையும் அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், செய்யார் சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) ஆயிரத்து அரசு ராஜாசேகரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# முதலமைச்சரின் எண்ணம்-உழைப்புதான் விளையாட்டு வீரர்களின் திறமைக்குக் கிடைத்த விருதுகள்!

## கோவையில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கோவை, மார்ச் 2–**

**கோவையில், மாவட்டம் முழுவதுமுள்ள 228 ஊராட்சிகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

கோவை மாவட்டத்தில் உள்ள 228 ஊராட்சி மன்றங்களுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 600 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டத்தை, சென்ற வாரம் மதுரையில் தொடங்கி வைத்தோம். மதுரைக்கு அடுத்து இன்றைக்கு கோவை மாநகரில் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கிரிக்கெட், வாலிபால், கால்பந்து, சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்குகிற பெருமையான, மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### சாதனை படைக்க வேண்டும் என்பதே நோக்கம்!

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய சைக்கிளிங் வீராங்கனை தங்கை தன்யதா அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். ‘யூத் காமன்வெல்த் கேம்ஸ்’ மற்றும் ‘வேர்ல்டு சாம்பியன்ஷிப் கொலம்பியா 2023’-ல் பங்கேற்று தமிழ்நாட்டுக்கும் இந்தியாவிக்கும் பெருமை சேர்த்திருப்பவர் அருமை சகோதரி தன்யதா அவர்கள்.

‘கேலோ இந்தியா’ போட்டிகளில் இரண்டு வெண்கலப் பதக்கம் மற்றும் ஒரு தங்கப் பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர் சகோதரி சங்கீதா அவர்கள். அதேபோல் கோவையைச் சேர்ந்த தங்கை வித்யா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஐ.ஏ.எல். வேர்ல்டு சாம்பியன் போட்டிகளில் பங்கு பெற்று இரண்டு வெண்கலப் பதக்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றிருக்கிறார். அவருக்கும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கீதா, வித்யா போன்று நீங்கள் அத்தனை பேரும் சிறப்பாகப் பயிற்சி செய்து உங்களுடைய விளையாட்டுகளில் நீங்கள் சாதனை படைக்க வேண்டும் என்பது தான் இந்தத் திட்டத்தின் ஒரே நோக்கம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில் அவருடைய பேரில் இந்தத் திட்டம் செயல்படுவதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. இன்றைக்கு இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற வகையில் விளையாட்டுத்துறை சார்ந்த ஏராளமான முன்னெடுப்புகளை நாங்கள் எடுத்து வருகிறோம். சமீபத்தில்கூட கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை நடத்திக் காட்டினோம்.

கோவையிலும் கூட கேலோ இந்தியா போட்டிகளை நடத்தினோம். அந்தப் போட்டியில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதன் முறையாகப் பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடம் வந்தது. அடுத்த முறை நம் தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடிக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது.

நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை எடுத்து வருகிற முயற்சிகளைப் பாராட்டி ‘கான்ஃபிடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்’ என்ற அமைப்பு 20 நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கு ‘பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை அளித்துக் கௌரவித்தார்கள்.

### திறமைக்கு கிடைத்திருக்கும் விருதுகள்!

பிரபலமான ‘தி ஹிந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ என்ற பத்திரிகை பத்து நாட்களுக்கு முன்பு நம் விளையாட்டுத் துறைக்கு ‘தி பெஸ்ட் ஸ்டேட் ஃபார் தி ப்ரோமோஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதையும் நம் அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள். இந்த இரண்டு விருதும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழைப்புக்கும், அவரின் எண்ணத்துக்கும், இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள் உங்கள் அனைவரின் திறமைக்கும் கிடைத்திருக்கக்கூடிய விருதுகள்.

கடந்த வருடம் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யைத் தொடங்கி அதன்மூலம் ஏராளமான ஏழை, எளிய மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பிப்ரவரி 28-ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் சங்க மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். பல்லாயிரக்கணக்கான பேர் அதில் பங்கேற்று இருந்தார்கள். அதில் ‘பள்ளிக் கல்வித்துறைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் இந்த வருடம் பட்ஜெட்டில் 44 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், விளையாட்டுத் துறைக்கு வெறும் 440 கோடி ரூபாய்தான் ஒதுக்கி இருக்கிறார். அவருடைய தந்தை முதலமைச்சராக இருந்தாலும், பள்ளிக் கல்வித் துறைக்குதான் முக்கியத்துவம் கொடுக்கிறார்’ என்று அந்தக் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கூறினார்.

தந்தைதான் கொடுக்கவில்லை, நண்பர் நீங்களாவது கொடுக்கலாம். நான், உங்களிடம் நிதி கேட்கவில்லை. நான் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். பள்ளிக்கூடங்களில் விளையாட்டு வகுப்பை வாடகைக்கு எடுத்து உங்களின் கணக்குப் பாடத்தையும், அறிவியல் பாடத்தையும் ஆசிரியர்கள் நடத்திவிடுகிறீர்கள். அதை



மட்டும் தயவுசெய்து கொடுத்து விடுங்கள் என்ற ஒரே ஒரு கோரிக்கையை உங்கள் முன் அவரிடம் வைக்கிறேன்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிதி!

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு முதலில் நிதி கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர்தான். அவருடைய சொந்த நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாயை எங்களுக்குக் கொடுத்தார். இதுவரைக்கும் 300-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ஆறு கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலமாக நிதி உதவி அளித்திருக்கிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்கிற நம் வீரர் வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம். கடந்த வாரம் 650 வீரர்களுக்கு ரூபாய் 16 கோடியே 24 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறோம்.

தொடர்ந்து, தமிழ்நாட்டில் கேலோ இந்தியா யூத் கேம்ஸ், ஏசியன் ஹாக்கி கோப்பை தொடர், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, வேல்டு சர்ஃபிங் லீக், சைக்கிளத்தான், சென்னை செஸ் மாஸ்டர்ஸ்-2023, நேஷனல் ஹாக்கி தொடர் போன்ற போட்டிகளைத் தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் விளையாட்டுத்துறை என்றால், அது தமிழ்நாடுதான் என்ற வகையில்தொடர்ந்துபுதுப்புது முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதில் மிக மிக முக்கியமானதுதான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம். விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் இருக்கக்கூடாது. அது கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். கிராமங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் புத்துணர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

### ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’

முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும், விளையாட்டுத் துறையின் சார்பாக கலைஞரின் பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது இதுதான் முதல் முறை. கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு? ஏன் இந்தத் திட்டத்துக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்று உங்களில் சில பேருக்குச் சந்தேகம் இருக்கும். கலைஞர் அவர்கள் தன் சிறு வயதிலேயே களத்தில் இறங்கி விளையாடியவர். அதன் பிறகு அவர் அரசியலுக்கு வந்ததினால், ஆடுகளத்தில் விளையாடாமல் அரசியல் களத்தில் விளையாடினார். ஆனால், கலைஞர் அவர்கள் ஒரு ஆர்வமிக்க விளையாட்டு வீரர், விளையாட்டுப் போட்டிகளின் ரசிகர்.

அது கிரிக்கெட், தடகளம், ஒலிம்பிக், கால்பந்து என எந்தப் போட்டியாக இருந்தாலும் சரி தொலைக்காட்சிகளில் பார்த்து ரசிப்பார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆனால் அதையெல்லாம் விட கலைஞரின் பெயரை இந்தத் திட்டத்துக்குச் சூட்டியதற்கு இன்னொரு மிக மிக முக்கியமான காரணம் உண்டு.

### கலைஞரின் ஆற்றல்; யாரையும் ஒப்பிட முடியாது

ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்க வேண்டிய அத்தனை குணங்களும் திறமைகளும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருந்தன. ஆற்றல், கூர்மையான மனது, தோல்வியிலும் துவண்டு விடாத மனத்திடம், கூட்டுமுயற்சி என கலைஞரின் பண்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் விளையாட்டு வீரர்களுக்கும் அவசியமானது. கலைஞரின் ஆற்றலுக்கு நிகராக இன்னொருவரின் ஆற்றலை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

இன்றைக்குச் சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் இருக்கின்றன. இந்தக் காலத்திலேயே நாம் ஒவ்வொரு ஊருக்கும் சுற்றுப்பயணம் போகும் போது அயற்சி ஏற்படுகிறது. ஆனால், எந்தவித வசதிகளும் இல்லாமல் அந்தக் காலத்திலேயே தமிழ்நாடு முழுவதும் கிராமம், கிராமமாகச் சென்று சுற்றுப்பயணம் செய்து கட்சியை வளர்த்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஒரே நேரத்தில் அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் கொடி கட்டிப் பறந்திருக்கிறார் என்றால், அதற்கு எந்த அளவுக்கு அவருக்கு ஆற்றல் இருந்திருக்க வேண்டும்? எந்த அளவுக்கு அவர் உழைத்து இருப்பார் என்று நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். கலைஞருக்கு இருந்த அந்த ஆற்றல் இங்கு இருக்கக்கூடிய ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

அதேபோல கலைஞரிடம் இருந்த ஷார்ப் மைண்ட் மிக மிக ஆச்சரியமானது. தான் என்ன செய்யப் போகிறோம், அதற்கு எதிர் தரப்பில் இருப்பவர்கள் என்ன செய்வார்கள் அதற்கு நாம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று எப்போதுமே தயாராக இருந்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் அந்தத் திறமை தேவை. நாம் இப்படி விளையாண்டால், நம் எதிரணியினர் எப்படி விளையாடுவார்கள்? அதற்கு நாம் எப்படித் திருப்பி பதிலடி தரப் போகிறோம் என்று கூர்மையான அறிவு இருந்தால்தான் விளையாட்டில் நாம் வெற்றி பெற முடியும்

அதேபோல் கலைஞரின் மனத்திடம். தோல்வியாக இருந்தாலும் சரி, வெற்றியாக இருந்தாலும் சரி அவை இரண்டையுமே சமமாகப் பார்த்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். தோல்வி அடைந்து விட்டோம் என்று துவண்டு விடக்கூடாது. வெற்றி பெற்றுவிட்டோம் என்று ஆணவத்தில் ஆடவும் கூடாது. அதை கலைஞரின் வாழ்க்கையில் அவர் எப்போதுமே கடைப்பிடித்திருக்கிறார். தொடர்ந்து உழைத்துக் கொண்டு இருந்தால் நிச்சயம் வெற்றி நம்மைத் தேடிவரும் என்ற மனத் திடத்துடன் கடைசி வரை கலைஞர் அவர்கள் உழைத்துக் கொண்டிருந்தார்கள். அதேபோன்று மன உறுதி இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கலைஞரைப் போல ‘டீம் ஒர்க்’ செய்த இன்னொரு மனிதரை இந்த உலகத்தில் நீங்கள் பார்க்கவே முடியாது. அந்த டீமை கலைஞர் அவர்கள் மிக நேர்த்தியாக வழிநடத்திக் கொண்டிருந்தார். கலைஞர் அவர்களுக்குப் பின் இப்போது அந்த டீமை நம் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் மூலமாக எவ்வளவு அடக்குமுறைகள் இருந்தாலும், எவ்வளவு சிக்கல் வந்தாலும் அதையெல்லாம் அந்த டீமை வைத்துத் தான் கலைஞர் அவர்கள் வெற்றியாகக் கையாண்டார்கள். இப்போது நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். அதேபோல்தான் விளையாட்டிலும் நல்ல டீமை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். நல்ல டீம் அமைந்தாலே நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்று அர்த்தம். இப்படி ஒரு திறமையான விளையாட்டு வீரனுக்கு இருக்கக்கூடிய அனைத்துக் குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதனால்தான் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத அரசியல் வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவில் உயர்ந்து நின்று கொண்டிருந்தார்.

### தேர்ந்தெடுத்துள்ள துறைகளில் வெல்ல வேண்டும்!

அத்தகைய கலைஞரின் பேரால் வழங்கப்படுகிற இந்த விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய இளைஞர்கள், கலைஞர் அவர்களுக்கு இருந்த அந்தக் குணங்களையும் திறமைகளையும் நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். `நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்’ என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இந்த நேரத்தில் நேற்று இரவு நாங்கள் மாணவர்களின் விடுதிக்குச் சென்று ஆய்வு செய்ததைப் பற்றி அண்ணன் முத்துசாமி அவர்கள் இங்கு குறிப்பிட்டுப் பேசினார்கள். அதை உடனடியாகச் சரி செய்த எஸ்.டி.ஏ.டி செகரட்டரி அவர்களுக்கும், நம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வந்திருக்கக்கூடிய சகோதரிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது நம் பெருமை கிடையாது, கடமை. மக்களுடைய வரிப்பணத்தில்தான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவர்களுக்குச் செய்ய வேண்டியது நம் பொறுப்பு. இங்கு வந்திருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் அனைவரும் இதைத் தொடர்ந்து செய்து, அந்த மாணவர்கள் படிக்கக்கூடிய தங்கக் கூடிய அனைத்து வசதிகளையும் அவர்களுக்கு என்னென்ன கொடுக்க வேண்டுமோ அதைச் செய்து தர வேண்டும்.

விளையாட்டுத்துறை மட்டுமல்ல நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துறைகளில் வெல்ல வேண்டும் என்றால் இன்றைய இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும். இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெறுகின்ற நீங்கள் அத்தனை பேரும், இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்கள், நம் முதலமைச்சரின் முகங்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். உங்கள் அனைவரையும் வாழ்த்தி விடை பெறுகிறேன். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் முத்துசாமி அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த விழாவில் அமைச்சர்கள் முத்துசாமி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், கோவை மாநகர மேயர் கல்பனா ஆனந்தகுமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில் அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் மேகநாத் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார், கோவை மாநகராட்சியின் ஆணையர் சிவகுரு, கோவை மாநகராட்சியின் துணை மேயர் வெற்றிச்செல்வன், கோபி. கார்த்திக், ஈரோடு பிரகாஷ், ராஜீவ் காந்தி, கோட்டை அப்பாஸ், ஆசிய தடகள வீராங்கனை வித்யா ராமராஜ், ஆசிய சைக்கிளிங் வீராங்கனை சங்கீதா, மவுண்ட் எவரெஸ்ட் மாரத்தான் வீராங்கனை நவுசிங் பானு சந்த் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு

# 7.37 பில்லியன் டாலராக உயர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது!

## மார்ச்சுக்குள் 9 பில்லியன் டாலராக உயர்ந்து புதிய சாதனை படைக்கும்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, மார்ச் 2-

தமிழ்நாடு முதலமைச்சர் தொழில் வளர்ச்சிக்கு அளிக்கும் ஊக்கம் காரணமாக மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு 7.37 பில்லியன் டாலராக உயர்ந்து இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மார்ச் மாதத்திற்குள் 9 பில்லியன் டாலராக உயர்ந்து புதிய சாதனை படைக்கும் என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள், தொழில் முதலீட்டு மாநாடுகள், வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறார்கள். இதன் காரணமாக ஒருதொழில் புரட்சியை நோக்கி தமிழ்நாடுஅரசின் தொழில் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் தொழில் துறையில் உயர்ந்த தொழிற் கொள்கைகளை கடைப்பிடிப்பதால், மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்படுகிறது.

மின்னணு பொருட்களின் ஏற்றுமதியில், இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கிடும் தமிழ்நாடு, தொடர்ச்சியாக, இந்நிலையை உறுதிப்படுத்தி வருகின்றது. மின்னணுவியல் ஏற்றுமதி தற்போது 7.37 பில்லியன் டாலரை அடைந்துள்ளது. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியே 22.65 பில்லியன் டாலர் எனும்போது, தமிழ்நாட்டின் ஏற்றுமதி, இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், கிட்டத்தட்ட 32.52 சதவிகிதம் ஆகும்.

முந்தைய நிதியாண்டில் (2022-2023) மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 5.37 பில்லியன் டாலர் ஆகும். இந்தத் தரவுகளை ஒப்பிடுகையில், நடப்பு நிதியாண்டில், அதாவது 2023-24-ல், 10 மாத காலகட்டத்திற்குள்ளாகவே, 7.37 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணுப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டின் (2023-2024) இறுதிக்குள் மாநிலத்தின் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 9 பில்லியன் டாலர் எய்தி புதிய சாதனை படைக்கும்.

தமிழ்நாடு பல்வேறு துறைகளில், குறிப்பாக மின்னணுப் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது என்றால், அதற்குப் பல காரணிகள் உள்ளது. தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவம், முனைப்பான ஆளுமை, கொள்கை சார்ந்த அணுகுமுறை, வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயல்படும் நிர்வாகம், உற்பத்தி மற்றும் துல்லியப் பொறியியலில் சிறந்து விளங்குதல், உயர்தர தொழில்நுட்பங்களைக் கையாளும் திறன் போன்ற பல சிறப்பம்சங் களைக் கொண்டு, இத்தகைய அபார வளர்ச்சியை தமிழ்நாடு கண்டுள்ளது.

இந்த அபரிமிதமான வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும், இத்துறையில் கொட்டிக் கிடக்கும் பல்வேறு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்திலும், அன்மையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024 வெளியிடப்பட்டுள்ளது. 2030-ஆம் ஆண்டிற்குள், இத்துறையின் வளர்ச்சியை நன்கு துரிதப்படுத்தி, 2 இலட்சம் திறன் வாய்ந்த பணியாளர்களை உருவாக்குவதே, இந்தக் கொள்கையின் உயரிய நோக்கமாகும்.

பல்வேறு துறை சார்ந்த முதலீட்டாளர்களுடன் தொடர்ச்சியாக நல்லுறவுகள் மேற்கொண்டு வருவதன் மூலம், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வேகமாக குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து வருகிறது. மிகச் சிறந்த மனித வளம், அனைத்துத் துறைகளும் மேம்படும் வகையில் அமைந்துள்ள சிறப்பான சூழலமைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற வலுவான அம்சங்களைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இச்சாதனையைப் பற்றிப் பேசுகையில், தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, “இந்தியாவின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழ்நாடு அளித்து வரும் பெரும் பங்கினை, இந்தச் சாதனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், உற்பத்திக்கான பிரதான முதலீட்டு மாநிலமாகவும், இளைஞர்களுக்கு உயர்தர வேலைகளை உருவாக்குவதற்கான மையமாகவும், தமிழ்நாடு பிரகாசமாகச் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வது மட்டுமின்றி, எங்களின் தொழில் வளர்ச்சிப் பாதையில், மேலும், மேலும் புதிய சாதனைகளை உருவாக்குவோம்” என்று தெரிவித்துள்ளார்.

## பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு:

# மாணவ-மாணவியர்க்கு வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

**சென்னை, மார்ச் 2–**

**“பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுத உள்ள மாணவ–மாணவியர்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வை நாளை எழுத உள்ள மாணவர்களுக்கும் மாணவியர்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்!

உங்களது கல்வி வாழ்க்கையின் அடுத்தகட்டமான +2 இறுதித் தேர்வை அச்சமற்று எதிர்கொள்ளுங்கள். தெளிவாக எழுதுங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி அமைய வாழ்த்துகிறேன்.

தேர்வு என்பது மற்றுமொரு கல்வியியல் நடைமுறைதானே தவிர, அதுவே உங்களது திறமையை எடைபோடுவதற்கான அளவுகோல் கிடையாது. எனவே எவ்விதப் பதற்றமும் வேண்டாம்.

பெற்றோர்களும் இதனை நன்கு உணர்ந்து தங்களது குழந்தைகள் மீதான தேவையற்ற அழுத்தங்களைத் தவிர்த்து, அவர்களது வெற்றிக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.